DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
(In the Court of the Additional District Munsif, Sankarankovil )

| | |
|---|---|
| Calendar | --- |
| Miscellaneous | --- |
| Preliminary Register | : **CC 64/2024** |
| Deposition of Witness for | : PW 5 |
| Name | : திரு.மாரிமுத்து |
| Father's Name | : |
| Village | : |
| Taluk | : |
| Caste | : |
| Calling | : |
| Religion | : |
| Age | : |
| Date | : 27.11.2025 |

Solemnly affirmed in accordance with provision of act 1873 on the day of 27th November 2025.

1,2 **எதிரிகள் ஆஜர். 3ம் எதிரி ஆஜர் இல்லை. மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது. எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.**

**முதல்விசாரணை:**

நான் தற்போது தென்காசி இருப்புபாதை காவல்நிலையத்தில் தலைமைக்காவலராக பணிபுரிந்து வருகிறேன். இதற்கு முன்பு சின்னகோவிலான்குளம் காவல்நிலையத்தில் 07.06.2016ம் தேதி இரண்டாம் நிலைக்காவலராக பணிபுரிந்தபோது நிலையப்பொறுப்பில் இருந்தபோது 13.30 மணிக்கு சங்கரன்கோவில் அரசுமருத்துவமனையிலிருந்து போன் மூலம் கிடைக்கப்பெற்ற தகவலை பெற்று அரசு மருத்துவமனைக்கு சென்று அங்கு சிகிச்சையில் இருந்த பூரணம் என்பவரிடம் புகார் வாக்குமூலம் பெற்று அதன் தன்மைக்கேற்ப நிலையம் வந்து நிலையக்குற்ற எண்.92/2016, ச/பி.294(பி), 323, 506(2) இதச மற்றும் தமிழ்நாடு பெண்கள் துன்புறுத்தல் தடைச்சட்டம் பிரிவு 4ன் கீழ் முதல் தகவல் அறிக்கை பதிவுசெய்தேன். நான் பதிவு செய்த

**முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** இது சம்பந்தமாக என்னை உதவி ஆய்வாளர் விசாரித்தார்.

**எதிரிகள் தரப்பில் குறுக்குவிசாரணை**

நான் பதிவு செய்த முதல் தகவல் அறிக்கையில் காலம் எண்.15 ல் நீதிமன்றத்திற்கு அந்த அறிக்கை 07.06.2016 அன்று அனுப்பப்பட்டதாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். அந்த அறிக்கை நீதிமன்றத்தில் 13.06.2016 அன்று கிடைக்கப்பெற்றதாக நீதித்துறை நடுவர்அவர்கள் மேலொப்பம் செய்துள்ளார் என்றால் சரிதான். முதல் தகவல் அறிக்கை காலதாமதமாக நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்டதற்கான காரணம் அதில் தெரிவிக்கப்பட்டுள்ளதா என்றால் இல்லை. முதல் தகவல் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ள சம்பவம் எதுவும் நடைபெறவில்லைஎ ன்றாலும், அவ்வாறு சம்பவம் நடைபெற்றிருந்தால் முதல் தகவல் அறிக்கையை காலதாமதமாக நீதிமன்றத்திற்கு சமர்ப்பித்திருக்கமாட்டேன் என்றாலும் சரியல்ல. முதல் தகவல் அறிக்கையில் சங்கரன்கோவில் அரசு மருத்துவமனையிலிருந்து சம்பவம் தொடர்பாக மதியம் 1.30 மணிக்கு தகவல் கிடைத்ததாக துலங்கும் என்றால் சரிதான். முதல் தகவல் அறிக்கையில் சம்பவம் தொடர்பாக காவல்நிலையத்திற்கு தகவல் கிடைக்கப்பட்ட நேரமாக 17.40 மணி குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். 17.40 மணி முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்ட நேரம் ஆகும். அது தகவல் கிடைக்கப்பெற்ற நேரம் அல்ல. முதல் தகவல் அறிக்கை 3 வது காலத்தில் முதல் தகவல் அறிக்கை பதிவுசெய்யப்பட்ட நேரம் 17.40 மணி என குறிப்பிட்டு கூறப்பட்டுள்ளதா என்றால் இல்லை. நிகழ்நிலை புகார்தாரரான பூரணம் அளித்த புகார் வாக்குமூலத்தில் அவரை சுப்பிரமணியன் மேல்தாடையில் மிதித்ததாக தெரிவிக்கப்படவில்லை என்றால் சரிதான். மேற்படி புகார் வாக்குமூலத்தில் பூரணத்திற்கு பற்கள் உடைந்ததாக தெரிவிக்கப்பட்டுள்ளதா என்றால் இல்லை. அந்த புகார் வாக்குமூலத்தில் எதிரி கோமதி பூரணத்தின் மகளை மிதித்து கீழே தள்ளியதாக தெரிவிக்கப்பட்டுள்ளதா என்றால் இல்லை.

புகார் வாக்குமூலத்தில் எதிரிகள் பூரணத்தின் கணவரை கெட்ட வார்த்தைகளால் ஏசியதாக குறிப்பிடப்பட்டுள்ளதா என்றால் இல்லை. அந்த புகார் வாக்குமூலத்தில் எதிரி கோமதி பூரணத்தின் தலைமுடியை பிடித்து இழுத்து கீழே தள்ளியதாக குறிப்பிடப்பட்டுள்ளதா என்றால் இல்லை. புகார் வாக்குமூலத்தில் எதிரி சுப்பிரமணியன் முத்துராஜை கன்னத்தில் ஓங்கி அடித்ததாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். முதல் தகவல் அறிக்கை மற்றும் புகார் வாக்குமூலம் வழக்கிற்காக உற்பத்தி செய்யப்பட்ட ஆவணங்கள் என்றாலும், எதிரிகளுக்கும், இவ்வழக்கிற்கும் சம்பந்தம் இல்லை என்றாலும் சரியல்ல. நான் முதல் விசாரணையில் கூறியவாறு புகார் வாக்குமூலம் பதிவு செய்யவில்லை என்றாலும, அதன் அடிப்படையில் முதல் தகவல்அறிக்கை பதிவுசெய்யவில்லை என்றாலும் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை.**